IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.
PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா.12 { Prosecution PW.12
{ Defence
{ Court

1. Name : மருத்துவர் திருரஞ்சித்

2. Father Name : ரெங்காசமி

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது செருவாவிடுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2016 ஆம் தேதி நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக

பணியிலிருந்த போது காலை 10.38 மணியளவில் பசுபதி, த/பெ.பக்கிரிசாமி, திருக்கண்ணமங்கை ஆண் வயது 40 என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்கு ஆஜர் செய்தார். அவரை நான் பரிசோதணை செய்தபோது அவர் சுயநினைவோடு காணப்பட்டார். அவர் என்னிடத்தில் நடந்து சென்றபோது கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 9.48 மணியளில் திருக்கண்ணமங்கையருகே இருச்சக்கர வாகனம் மோதி காயம்பட்டதாக கூறினார். அவருக்கு 5x 4 x 2 செ.மீ அளவில் வலது கால் பாதத்தில் வெட்டுக்காயம் ஒன்றும், 2 x2x 1 செ.மீ அளவில் மேல் உதட்டில் கிழிந்த காயம் ஒன்றும், 2 x 2 x 1 செ.மீ அளவில் வலது கண்புருவத்தில் கிழிந்த காயமும் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்காக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.13. அதே நாள் காலை 10.39 மணியளவில் மாரியம்மாள், க/பெ.மாயாண்டி, திருக்கண்ணமங்கை பெண் வயது 35 என்பவரை அவரது கணவர் சிகிச்சைக்காக ஆஜர் செய்தார். நான் அவரை பரிசோதணை செய்தேன். அப்போது அவர் சுயநினைவோடு காணப்பட்டார். அவரும் தான் நடந்து சென்றபோது திருக்கண்ணமங்கை அருகே கடந்த 29.11.2016 ஆம் தேதி இருச்சக்கர வாகனம் மோதி காயம்பட்டதாக கூறினார். அவருக்கு 3x2x1 செ.மீ அளவில் இடது முழங்கையில் வெட்டுக்காயம் ஒன்றும், 4 x 3 செ.மீ அளவில் இடது பக்க முதுகில் சிராய்ப்பு காயமும் காணப்பட்டது. அவரையும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்காக

நான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.14. அதே நாள் ஜெயா, க/பெ.முத்துகிருஷ்ணன், பெண் வயது 25 என்பவரும் சிகிச்சைக்காக ஆஜரானார். அவரையும் நான்தான் பரிசோதனை செய்து, திருவாரூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் அதற்காக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் ஏற்கனவே அ.சா.11 ன் மூலம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதேநாள் காலை 10.42 மணியளவில் முத்துகிருஷ்ணன், த/பெ.குஞ்சுப்பிள்ளை, ஆண் வயது 42 என்பவரை அவரது அத்தை சிகிச்சைக்காக ஆஜர் செய்தார். அவரை நான் பரிசோதித்தபோது மயக்கநிலையில் இருந்தார். அவரை கடந்த 29.11.2016 ஆம் தேதி வடகண்டம் அருகே காலை 9.45 மணியளவில் 10 தெரிந்த நபர்கள் கத்தியால் குத்தியதாகவும், வெட்டியதாகவும் அவரது அத்தை என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது வலது கையில் 20x2x6 செ.மீ அளவில் ஓர் வெட்டுக்காயமும், இடதுகால் பின்காலில் 5x2x2 செ.மீ அளவில் ஓர் வெட்டுக்காயமும், வலது முதுகில் 2x1x விரல் செல்லும் அளவில் ஓர் குத்துக்காயமும், வலது முதுகில் 5x4x2 செ.மீ அளவிலும் 4x3x2 செ.மீ அளவிலும் இரண்டு வெட்டுக்காயங்கள் வலது முதுகில் காணப்பட்டது. அவரையும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.15.

அதேநாள் காலை 10.43 மணியளவில் முரளி, த/பெ. குஞ்சுப்பிள்ளை ஆண் வயது 31 என்பவரை அவரது அப்பா குஞ்சுப்பிள்ளை சிகிச்சைக்காக ஆஜர் செய்தார். நான் அவரை பரிசோதணை செய்து அவருக்கு இருந்த காயங்களை பார்வையிட்டு உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் ஏற்கனவே அ.சா.11 ன் மூலம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே நாள் காலை 10.47 மணியளவில் குஞ்சுப்பிள்ளை, த/பெ. கோபால்ராஜன், ஆண் வயது 62 என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்காக ஆஜர்படுத்தினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவோடு காணப்பட்டார். அவர் தன்னை 8 தெரிந்த நபர்கள் இரும்பு கம்பியால், திருக்கண்ணமங்கையில் உள்ள தனது வீட்டருகே கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 8 மணியளவில் தாக்கியதாக கூறினார். அவருக்கு வலது முன்கையில் 10x10 செ.மீ அளவில் வீக்ககாயமும், இடது தோள்பட்டையில் 10x5 செ.மீ அளவில் வீக்க காயமும், இடது பெருவிரலில் பிளவு காயமும், காணப்பட்டது. அவரையும் நான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அதற்காக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.16. குஞ்சுப்பிள்ளைக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என கருத்து தெரிவித்து மருத்துவ சான்றிதழ் வழங்கினேன். முத்துகிருஷ்ணனுக்கு எலும்பு முறிவு மருத்துவர் திரு.கோகுலகிருஷ்ணன் சிகிச்சையளித்து அவருக்குஏற்பட்டுள்ள காயம்

கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். அந்த காயச்சான்றிதழில் நானும் மேற்படி முத்துகிருஷ்ணனை சிகிச்சைக்கு அனுமதித்தவர் என்ற முறையில் கையொப்பம் செய்துள்ளேன். அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.17. இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரான பசுபதி, மாரியம்மாள் ஆகிய இருவரும் வாகனம் மோதி காயம் ஏற்பட்டதாக கூறினார்கள் என்று சொன்னால் சரிதான். என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரான குஞ்சுப்பிள்ளை நான் பரிசோதித்தபோது, நல்ல மனநிலையில் இருந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு காயம் எப்படி ஏற்பட்டது என்ற விவரத்தை அவரே என்னிடம் கூறியதாக நான் அ.சா.ஆ.16 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவர் தனது மகன்களான முரளி மற்றும் முத்துகிருஷ்ணன் ஆகியோருடன் இருச்சக்கர வாகனத்தில் வந்தபோது வடகண்டம் அருகே காலை 9.45 மணியளவில் தனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. நான் சிகிச்சையளித்த நபர்கள் யாருக்கும் எலும்பு முறிவு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துகிருஷ்ணனுக்கு வலது மற்றும் இடது கால்கள், வலது இடது முன்கை ஆகியவைகளில் எலும்பு முறிந்துள்ளது. அந்த காயமானது இருச்சக்கர வாகனத்திலிருந்து கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான்.

காயம் குறித்து கருத்துரை வழங்கும்போது எடுக்கப்பட்ட நுண்கதிர்படமோ, அதற்கான அறிக்கையோ காயம் குறித்த கருத்துரை சான்றுடன் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எலும்பு முறிவுடைய தன்மைகள் குறித்து காயம் குறித்த கருத்துரை சான்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:53:24 +0530